பத்திரிகை நிருபர்களுக்கு வீடுகள்

* 2396 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பத்திரிகை நிருபர்களுக்கென வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் அல்லது கட்டி முடிக்கப்பட்ட வீடுகளில் ஒதுக்கீடு உண்டா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு எத்தனை சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 3% (சதவீதம்) ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகின்றது.

ரயில் பாதை அமைத்தல்

* 5110 திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுவையிலிருந்து விழுப்புரம், திருவண்ணாமலை, ஜோலார் பேட்டை வழியாக ரயில்பாதை அமைக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாண்டிச்சேரியிலிருந்து, திருவண்ணாமலை, உத்தங்காரி, தாசம்பட்டி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம் வழியாக பாலக்கோடு வரை புதிய இரயில்பாதை அமைக்க போக்குவரத்து சர்வே ஒன்றினை மேற்கொள்ள இரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

9-30 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. பொருள் போக்குவரத்துக்கு மிகவும் அவசியமான ஒன்று இது. ஆகவே, ரெயில்வே போக்குவரத்து ஆய்வினை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?